**03.03.2025**

**அ.வ.எண்.194/2015**

**<u>பி.சா.3 வசந்த்குமார் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தில் இன்றைய தேதியில் மின் இணைப்பு இல்லை என்றால் மின் இணைப்பு உள்ளது. மின் இணைப்பு எண் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் வசந்த்குமார் மற்றும் அஜித்குமார். முருகையன் என்பவர் எனது தகப்பனாரின் தம்பி. ரத்தினம் என்பவர் எனது தகப்பனாரின் தகப்பனார். ரத்தினம் மற்றும் முருகையன் பெயரில் உள்ள மின் இணைப்புக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எனது பெயரில் மின் இணைப்பு எப்போது வழங்கப்பட்டது என்றால் சுமார் 9 மாதங்களுக்கு முன்பு. மின் வாரியத்தில் நான் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மின் வாரியத்திலிருந்து தாவா சொத்தை பார்வையிட்டார்களா என்றால் பார்வையிட்டார்கள்.

2. தாவா சொத்தில் உள்ள வீடு கடந்த 8 வருடங்களாக பழுதடைந்து குடியிருக்க தகுதியற்ற நிலையில் உள்ளது என்றால் சரிதான். எனது தம்பியும் எனது தகப்பனாரும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பிறகுதான் பி.சா.ஆ.16 வழங்கப் பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் மின் கட்டணம் செலுத்தினேனா என்றால் அந்த மின் இணைப்பு பயன்பாட்டில் இல்லாததால் நான் மின் கட்டணம் செலுத்தவில்லை. பி.சா.ஆ.5 உள்ள மின் கட்டண ரசீதில் மின் இணைப்பு எண்.673 க்கு முருகையன் செலுத்தியதாக கண்டுள்ளது என்றால்

சரிதான். மாரியம்மன் கோவில் தெருவில் முருகையனுக்கு தனியாக வீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி மின் இணைப்பு எண்.673 முதன் முதலில் மாரியம்மன் கோவில் தெருவில் முருகையன் வீட்டிற்கு வழங்கப்பட்டது என்றால் இல்லை. எங்களது வீட்டிற்கு வழங்கப்பட்டது.

3. முருகையன் வீட்டின் மின் இணைப்பு எண் எனக்கு ஞாபகமில்லை. ரத்தினம் பெயரில் இருந்த மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. எனது தாத்தாவிற்கும் மேற்படி மாரியம்மன் கோவில் தெருவில் தனியாக வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கும் மின் இணைப்பு இருந்தது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ல் உள்ள மற்றொரு மின் கட்டண ரசீதில் மின் இணைப்பு எண்.321 க்கு ரத்தினம் பெயரில் மின் கட்டணம் செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். முருகையன் எவ்வளவு காலமாக அவர் வீட்டில் வசித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. சுமார் 30 வருடங்கள் இருக்குமா என்றால் அதற்கு மேலாக இருக்கும்.

4. எனது தகப்பனர் பெயரில் மின் இணைப்பு இருந்ததா என்றால் முதலில் எனது தகப்பனார் பெயரில் இருந்தது. அது தவறுதலாக எனது தாத்தா பெயரில் மாற்றப்பட்டது. அதன்பின்பு எனது பெயரில் மாற்றப்பட்டது. எனது தகப்பனார் பெயரில் மின் கட்டணம் செலுத்தப்பட்டதா என்றால் செலுத்தப்பட்டது. அதற்கான ரசீதுகள் உள்ளதா என்றால் அதை எனது முந்தைய வழக்கறிஞரிடம் கொடுத்தேன். முருகையன் பெயரில் இருந்த மின் இணைப்பு எனது பெயரில் மாற்றப்பட்டதா என்றால் ஆமாம்.

5. அந்த மின் இணைப்பு எண் பி.சா.ஆ.16 தானா என்றால் ஆமாம். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது பெயரில் பெறப்பட்ட பி.சா.ஆ.16 ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை மற்றும் மின் கட்டண ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களில் எனது தகப்பனார் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை மற்றும் மின் கட்டண ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் எந்த காலத்திலும் மின் இணைப்பு இருந்தது இல்லை என்றாலும் நான் தாக்கல் செய்த மின் கட்டண அட்டை மற்றும் மின் கட்டண ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றாலும் சரியல்ல.

6. பி.சா.ஆ.13 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 1ம் வாதி 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு வாய் மொழியாக சொத்தினை கொடுத்தது போல் கல்யாணி என்பவருக்கு வாய் மொழியாக சொத்துகளைக் கொடுத்தார் என்று காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.13 யை நான் படித்து பார்ததேன். மேற்படி விவரம் பி.சா.ஆ.13 ல் சொல்லப்பட்டதா என்றால் சொல்லப்பட்டது. தாவா சொத்திற்கும் பி.சா.ஆ.13 க்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.13 ல் சொல்லியுள்ள சங்கதிகள் இந்த வழக்கின் வாதியை கட்டுபடுத்தாது என்றாலும் பி.சா.ஆ.13 முன்னிலைக்கு வாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றாலும் சரிதான்.

7. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் யார் இருக்கிறார் என்றால் கன்னியப்பன் இடம் உள்ளது. கன்னியப்பன் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் கழனி உள்ளது. அது யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் லோகநாயகி நிலம் உள்ளது. பி.சா.ஆ.13ல் உள்ள சொத்துகள் எங்குள்ளது என்றால் எங்களது சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது. கல்யாணி என்பவர் லோகநாயகி என்பவரின் தாயார். கல்யாணி சொத்திற்கு வடக்கு பக்கம் யார் இருக்கிறார்கள் என்றால் வீரமுத்து இடம். பி.சா.ஆ.13ல் உள்ள சொத்திற்கு மேற்கு பக்கம் சாலை என்றால் சரிதான். கிழக்கு பக்கம் யாருடைய நிலம் என்று எனக்கு தெரியாது. தெற்கு பக்கம் எங்களது நிலம் உள்ளது.

8. பி.சா.ஆ.13ல் ஐக்குபந்தியில் வடக்கு பக்கம் ராதா மனை என்று கண்டுள்ளது தவறு என்றால் எனக்கு திசைகள் சரியாக தெரியாமல் கூறினேன். திசைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)